மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: திரு.ப. ரமேஷ், பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாள், வியாழக்கிழமை

I.A.No. 490/2025 in O.S.No. 131/2015

1. மகேந்திரன்
2. புஸ்பநாதன் ...மனுதாரர்கள்/வாதிகள்

எதிர்

1. மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்
2. வட்டாட்சியர், பாபநாசம் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

<u>வழக்கறிஞர் முன்னிலை:</u>

மனுதாரர்கள்/வாதிகளுக்காக : திரு. M.குபேந்திரன்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்காக : அரசு வழக்கறிஞர்

<u>**உத்தரவு**</u>

1. வாதிகள் தரப்பு சாட்சியாக 1–ஆம் பிரதிவாதியை விசாரிக்க அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 16 விதி 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. **மனுவின் சுருக்கம்:**</u>

2.1) பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்தக் கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகளின் கட்சியை நிரூபணம் செய்ய சாட்சிகளும், ஆவணங்களும் வாதிகளிடம் உள்ளது.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.11.27 18:08:48 +0530

பிரதிவாதிகள் தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்.21/1B–ல் உட்பிரிவு செய்து வாதிகளுக்கு சொந்தமான பட்டா நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள்.

2.2) மேற்படி புல எண்.21/1B–ல் உட்பிரிவு செய்யப்பட்டதை ரத்து செய்யக்கோரி 1–ஆம் பிரதிவாதியிடம் மனு செய்து அதனடிப்படையில் 1–ஆம் பிரதிவாதி இரத்து செய்ததற்கான உத்தரவும் வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை நிரூபணம் செய்ய வேண்டியிருப்பதால் வாதிகள் தரப்பில் 1–ஆம் பிரதிவாதியை வாதிகள் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. ஆகவே 1–ஆம் பிரதிவாதி மேற்படி புல எண் சம்பந்தப்பட்ட உரிய ஆவணங்களுடன், உரிய அதிகாரியுடன் ஆஜராகி சாட்சியமளிக்க உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிருரை சுருக்கம்:</u>**

இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கில் அரசு தரப்பினரை பிரதிவாதிகளாக சேர்த்துள்ள போது வாதிகள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க அனுமதிக்கோரி மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல. 1–ஆம் பிரதிவாதி மாவட்ட ஆட்சியர் ஆவார். அவரது பணிச்சுமையின் காரணமாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வருவது சாத்தியமற்ற ஒன்றாகும். மனுதாரர் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.11.27 18:08:55 +0530

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வாதுரைகள் பரிசீலனை செய்யப்பட்டது. தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கதக்கதா? என்பதே ஆகும்.

5. **தீர்வு:**

5.1) வாதிகளுக்கு சொந்தமான பட்டா நிலத்தில் பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அமைத்துள்ள பாதையை அகற்றிட செயலுறுத்தக் கட்டளை பிறப்பிக்க கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு 27.08.2015 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 11.01.2018 அன்று எழுவினா வனையப்பட்டு 06.08.2019 அன்றுதான் வாதிகள் தரப்பு சாட்சி விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளைக் கடந்த பின்பும் வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாதிகளால் ஒத்திவைப்பு பெறப்பட்டு வருகிறது.

5.2) எந்தவொரு பிரதிவாதியையும் வாதி தரப்பில் சாட்சியாக விசாரிக்க எந்த சட்டத்தடையும் இல்லை. ஆனால் இம்மனுவில் 1–ஆம் பிரதிவாதியை வாதிகள் தரப்பு சாட்சியாக விசாரிக்க அனுமதி கோருவதற்கு கூறும் காரணங்கள் ஏற்புடையதா? என்பது பரிசீலிக்க வேண்டியுள்ளது.

5.3) மனுதாரர் பிரமாண வாக்குமூலத்தில் புல எண்.21/1B–ல் உட்பிரிவு செய்யப்பட்டதை இரத்து செய்யக்கோரி 1–ஆம் பிரதிவாதியிடம் மனு செய்து அதனடிப்படையில் 1–ஆம் பிரதிவாதி இரத்து செய்ததற்கான உத்தரவும் வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை நிரூபணம் செய்ய



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.11.27 18:09:01 +0530

வேண்டியிருப்பதால் வாதிகள் தரப்பில் 1–ஆம் பிரதிவாதியை வாதிகள் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

5.4) அவ்வாறு 1–ஆம் பிரதிவாதி முதல் இன தாவா சொத்தில் உட்பிரிவு செய்து பிறப்பித்த உத்தரவு வாதிகள் கைவசம் உள்ளது எனும் போது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் அதை நிரூபிக்க 1–ஆம் பிரதிவாதியை சாட்சியாக அழைக்க அனுமதி கோருவது அசல் வழக்கினை மேற்கொண்டும் காலம் கடத்துவதற்கு வழிவகுக்கும் நடவடிக்கையாக தான் பார்க்க முடிகிறது.

5.5) வாதிதான் தனது வழக்கினை தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்ய வேண்டும். தனது வழக்கினை நிரூபிக்க போதிய ஆவணங்கள் தன்வசம் இருப்பதாக வாதிகள் கூறியுள்ள நிலையில் அந்த ஆவணத்தை நிரூபிக்க பிரதிவாதியை சாட்சியாக அழைக்க வேண்டும் என கோருவதற்கு கூறும் காரணம் ஏற்புடையதாக இல்லை. எனவே இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்று தீர்வு காண்கிறேன்.

6. <u>**முடிவு:**</u>

**இறுதியாக இம்மனுவினை செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறேன்.**

இவ்வுத்தரவு என்னால் வாய்மொழியாக சொல்லப்பட்டு *Google Docs.* உதவியுடன் வரிவடிவம் கொடுக்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (27.11.2025) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.11.27 18:09:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.